DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 123/2023 Crime No. 44/2020 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1-LW1- மாரியாயி | Village | |
| Husband's Name | கந்தசாமி | Taluk | |
| Age | 60 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1) ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது பக்கத்துக் காட்டுக்காரர் ஆவார். தேதி மற்றும் மாதம் நினைவில்லை, சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள், காலை சுமார் 10.00 மணியளவில், நான் எனது வீட்டிலிருந்து, எனது காட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது எனக்கு எதிரில் வந்த எதிரியின் மகள் சுமதி என்னை பார்த்து சாடை மாடையாக பேசிக்கொண்டே சென்றார். நான் அதை கண்டுகொள்ளாமல் எனது காட்டிற்கு செல்வதற்காக சிறிது தூரம் சென்றேன். அப்போது கோவில் அருகில் சென்றபோது அங்கு வந்த எதிரி, என்னிடம் வந்து என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, எனது இரண்டு தோள்களையும் பிடித்துக்கொண்டு இடது கை நடுவிரலை கடித்துவிட்டார்.

2) பின்னர் நான் எதிரியின் காதை கடித்துவிட்டேன். வலி தாங்க முடியாமல் சத்தம் போடவே அருகில் இருந்தவர்கள் வந்துவிட்டார்கள். பின்னர் எனது மகன் வந்து ஒரு போக்கு வண்டி மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆனால், என்னிடம் கையொப்பமோ, கைரேகையோ பெறவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த சங்கதி தொடர்பாக ஒரு Counter வழக்கு நிலுவையில் உள்ளது. நான் கூறுகிறேன் நீங்கள்தான் எதிரியை தாக்கிவிட்டு அவர் அளித்த புகாரிலிருந்து தப்பிக்கும் வண்ணம் நீங்கள் அவரை அடித்துவிட்டு, வேறொரு சம்பவம் மூலம் ஏற்பட்ட காயத்தை காட்டி எதிரி மீது பொய்யான வழக்கு கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 20/2024 Crime No. 535/2017 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4-LW10- கிருஷ்ணன் | Village | |
| Father Name | குருநாதன் | Taluk | |
| Age | 48 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

போலீசார் என்னிடம் காட்டியது செயின், தங்க மோதிரம் மற்றும் இரண்டு தங்க காசுகள்தான். ஆனால் முழுதும் தங்க காசுகள் கைப்பற்றியதாக பொய் சங்கதிகள் சொன்ன காகிதத்தில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அரசு தரப்பில், எதிரியிடம் இருந்து எந்த அரிவாளும் கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று கூறப்பட்டது.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

24.12.2017 ம் தேதியன்று, போலீசார் சித்தோடு, நால்ரோடு பஸ் ஸ்டாப்பில் எதிரிகளை கைது செய்தபோது, எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றால், சரியல்ல. எதிரி அசோக்குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சொத்தை போலீசார் கைப்பற்றியதாக சொல்லப்படும் ஈரோடு, மொகைதீன் வீதியிலுள்ள ராஜசேகர் என்பவரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்களா என்றால், இல்லை. காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அப்போது அதில் 10 தங்க காசுகள் கைப்பற்றியதாக கூறினார்கள். அந்த தங்க காசுகளை என்னிடம் காட்டினார்கள் என்று போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 74/2023 Crime No. 21/2023 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4/LW-21- முருகேசன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் ஆப்பப்கூடல் காவல் நிலையத்தில் பணியாற்றி, தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். ஆப்பக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.21/2023, (CC.No.74/2023) என்ற வழக்கில், சாட்சியான LW9 – கருப்புசாமி, த/பெ.முத்துசாமி, என்பவர் தலைமறைவாக உள்ளார் ஆகையால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டி அவர் மீது பிணையில் விடக்கூடிய பிடியாணை கட்டளை பிறப்பிக்குமாறு இந்நீதிமன்றத்தை தாழ்மையுடன் பிரார்த்தித்து கொள்கிறேன். **இந்த சாட்சி மூலமாக ஆப்பக்கூடல் உதவி ஆய்வாளர் வழங்கிய வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 49/2023 Crime No. 479/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW10- சந்திரபாபு | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் பவானி காவல் நிலையத்தில் பணியாற்றி, நீதிமன்ற சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். பவானி காவல் நிலைய குற்ற எண்.479/2022, (CC.No.49/2023) என்ற வழக்கின் 1ம் எதிரி மோகன், அம்மாபேட்டை காவல் நிலைய குற்ற எண்.265/2024 என்ற வழக்கில் கோபி மாவட்ட மத்திய சிறையில் உள்ளார். ஆகையால் அவரை இவ்வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த PT Warrant வழங்க உத்தரவிடுமாறு இந்த நீதிமன்றத்தில் தாழ்மையுடன் பிரார்த்தித்துக்கொள்கிறேன். இந்த சாட்சி மூலமாக நீதிமன்றத்திற்கு கொடுக்கப்பட்ட அம்மாபேட்டை காவல் ஆய்வாளர் வழங்கிய **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 134/2022 Crime No. 29/2021 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3-LW4- தங்கபாலு | Village | |
| Father Name | பழனிசாமி | Taluk | |
| Age | 25 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை-**

நான் தர்மபுரி மாவட்டம், தொப்பூர், மூலக்காட்டில் குடியிருந்து கொண்டு, கட்டிட வேலை செய்து வருகிறேன். அ.சா1 ம் அ.சா. 2ம் எங்களுக்கு முன்னால் ஒரு பைக்கில் சென்று கொண்டிருந்தார்கள். நானும், சத்தியும் மற்றொரு பைக்கில் பின்னால் சென்று கொண்டிருந்தோம். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. கூட்டமாக இருந்தது. அருகில் சென்று பார்த்தபோது லாரி, பைக்கின் மீது மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நீங்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சங்கதிகளை போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 134/2022 Crime No. 29/2021 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2-LW2- பிரகாஷ் | Village | |
| Father Name | அழகப்பன் | Taluk | |
| Age | 29 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை-**

நான் தர்மபுரி மாவட்டம், பென்னாகரம், சின்னம்பள்ளியில் குடியிருந்து கொண்டு, கட்டிட வேலை செய்து வருகிறேன். நானும், அ.சா.1 ம் ஒரே வாகனத்தில்தான் சென்றோம். நான் சென்ற வாகனத்தை அ.சா.1 தான் ஓட்டிக் கொண்டு சென்றார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. கூட்டமாக இருந்தது. அருகில் சென்று பார்த்தபோது லாரி, பைக்கின் மீது மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நீங்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சங்கதிகளை போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 134/2022 Crime No. 29/2021 Station Bhavani

| Name | PW-1/LW1- சதீஷ்குமார் | Village | |
|---|---|---|---|
| Father Name | வேல்முருகன் | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை-**

1) நான் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தெத்திகிரிபட்டி கிராமத்தில் குடியிருந்து கொண்டு, கட்டிட வேலை செய்து வருகிறேன். இவ்விபத்தில் இறந்துபோன தங்கமணி என்னுடன் பணிபுரிபவர் ஆவார். கடந்த 13.01.2022 ம் தேதியன்று, மாலை சுமார் 03.30 மணியளவில், மேட்டூர் செல்வதற்காக தங்கமணி அவரது இருசக்கர வாகனத்திலும், நானும், பிரகாஷ் ஒரு பைக்கிலும், தங்கபாலு மற்றும் சக்தி ஆகியோர்கள் ஒரு பைக்கிலும் குப்பிச்சிபாளையம் அருகில் சென்று கொண்டிருந்தோம். நாங்கள் ரோட்டின் இடது புறமாக சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த டிப்பர் லாரி தங்கமணியின் பைக்கின் மீது மோதியது. விபத்தை நேரில் பார்த்த நான் அருகில் சென்று பார்த்தபோது தங்கமணிக்கு தலை, மார்பு, கை மற்றும் கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. அவர் பேசவில்லை.

2) பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் ஆம்புலன்ஸ் மூலமாக அவரை பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். பவானி காவல் நிலையம் சென்று மேற்படி விபத்து தொடர்பாக புகார் அளித்தேன். மேற்படி விபத்தை ஏற்படுத்திய டிப்பர் லாரியின் ஓட்டுநரை அடையாளம் தெரியும் என்று சாட்சி கூறுகிறார். எதிரி ஆஜர் இல்லை. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் இறந்துபோன தங்கமணிக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்பதை பற்றி எனக்கு தெரியாத. இவ்விபத்து ஏற்படுவதற்கு 3 மாதங்கள் முன்புதான் புதியதாக அந்த வண்டியை எடுத்திருந்தார். நாங்கள் சுமார் 01.00 மணிக்கு சென்னிமலையில் வேலை முடித்து நாங்கள் அனைவரும் ஊருக்கு திரும்பினோம். சம்பவயிடத்தில் ரோடு போட்டார்கள் என்று சொன்னால், சரியல்ல. நான் விபத்தை நேரில்தான் பார்த்தேன். சுமார் 100 அடி தூரத்தில் சென்று கொண்டிருந்தார். இறந்துபோனவர் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு முன் சென்ற வாகனத்தை முந்தி செல்லும்போது இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால், சரியல்ல. அவருக்கு

முன்னால் எந்த வாகனமும செல்லவில்லை. இந்த விபத்தில் இறந்து போனவர்தான் வலது பக்கம் ஏறிச்சென்றதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால், சரியல்ல. நான் கூறுகிறேன் நீங்கள் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னாலும், இவ்வழக்கில் இறந்துபோன நபர் உங்கள் நண்பர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெற்று தர வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 104/2023 Crime No. 100/2023 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4/LW4- கந்தசாமி | Village | |
| Father Name | நல்லதம்பி | Taluk | |
| Age | 50 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் சோலையப்பன் கோவிலில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எதிரியும், அ.சா.1 ம் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

சம்பவத்தன்று, அதிகாலை சுமார் 00.30 மணியளவில், எதிரியும், அ.சா.1 ம் வாய்த்தகராறில் ஈடுபட்டதால் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்ததாகவும், எதிரியின் வீட்டு தண்ணீர் குழாய் உடைந்து தண்ணீர் வீதியில் போவது தொடர்பாக இருவருக்கும் தகராறு நடந்து கொண்டிருந்ததாகவும், அப்போது எதிரி, அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டி, அங்கு கிடந்த கொத்துக் கம்பை எடுத்து அ,,சா1 ன் தலையில் அடித்ததாகவும், அதை பார்த்த நான் விலக்காட்டிவிட சென்றபோது எதிரி, அ.சா.1 க்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து சென்று விட்டதாகவும் போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 104/2023 Crime No. 100/2023 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3/LW3- சத்தியசீலன் | Village | |
| Father Name | ராமசாமி | Taluk | |
| Age | 40 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் சோலையப்பன் கோவிலில் குடியிருந்து கொண்டு, தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எதிரியும், அ.சா.1 ம் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

சம்பவத்தன்று, அதிகாலை சுமார் 00.30 மணியளவில், எதிரியும், அ.சா.1 ம் வாய்த்தகராறில் ஈடுபட்டதால் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்ததாகவும், எதிரியின் வீட்டு தண்ணீர் குழாய் உடைந்து தண்ணீர் வீதியில் போவது தொடர்பாக இருவருக்கும் தகராறு நடந்து கொண்டிருந்ததாகவும், அப்போது எதிரி, அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டி, அங்கு கிடந்த கொத்துக் கம்பை எடுத்து அ,,சா1 ன் தலையில் அடித்ததாகவும், அதை பார்த்த நான் விலக்காட்டிவிட சென்றபோது எதிரி, அ.சா.1 க்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து சென்று விட்டதாகவும் போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 35/2019 Crime No. 56/2019 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-13/LW12- வடிவேல் குமார் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

1) நான் தற்பொழுது கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் பவானி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 07.02.2019ம் தேதியன்று, நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராஜன் என்பவர் நிலைய குற்ற எண்.56/2019, ச/பி இதச 294(b), 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை பெற்ற நான் அன்றைய தினம் இரவு 19.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான மூர்த்தி மற்றும் அய்யாசாமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்திலிருந்து கட்டிங் பிளேயர் ஒன்றினையும் மற்றும் கல் ஒன்றினையும், சுமார் 16 அடி நீளமுள்ள கருப்பு நிற கேபிள், அதனுன் மஞ்சள் சிவப்பு மற்றும் புளூ கலர் ஒயர்கள் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் கைப்பற்றிய வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள், இருசாள், பூஸ் (எ) அய்யம்மாள், அய்யம்மாள், க/பெ.தொப்பநல்லாகவுண்டர், பழனியம்மாள், பாலமுருகன், முத்துசாமி, தொப்பநல்லாகவுண்டர், மூர்த்தி மற்றும் அய்யாசாமி ஆகியோர்களை விசாரித்து தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர் அன்றைய தினம் இரவு 22.30 மணிக்கு மயிலம்பாடி கொண்டிரெட்டிப்பாளையம் பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்த எதிரிகள் மோகன் மற்றும் சிவக்குமார் ஆகியோர்களை விசாரிக்க குற்றத்தை ஒப்புக் கொண்டவர்களை 23.00 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி முறைப்படி கைது செய்தும், நிலையம் அழைத்து வந்த திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.அகல்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்றிதழ் பெற்றேன். மருத்துவரின் காயச்சான்று சாதாரண காயம் என்று சான்று வழங்கியிருந்ததாலும், வாதியை, எதிரி கையால் அடித்ததாக தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச 294(b), 324, 506(ii) ஆகிய பிரிவுகளிலிருந்து இதச 294(b), 323, 324, 506(ii) ஆகிய பிரிவுகளின்

கீழ் சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து 09.03.2019 ம் தேதியன்று எதிரிகள் இருவர் மீது இதச 294(b), 323, 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் புகார்தாரர் காவல் பணியில் உள்ள ஒரு காவலர் என்று சொன்னால், சரிதான். இந்த வழக்கின் வாதி மற்றும் எதிரிகளுக்கு இடையே நிலம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்ததை எனது புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கில் சான்று பொருட்கள் ஏதேனும் சம்பவயிடத்தில் இருந்து எடுத்து நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால், ஒப்படைத்துள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஒரு தனி நபருக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொன்னால், சரிதான். நான் கூறுகிறேன் இந்த வழக்கின் வாதி எதிரி மீது இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு மிகைப்படுத்தி எதிரி மீது கொடுத்த பொய்யான புகாரை நான் சரிவர விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது ஒரு பொய்யான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. நீங்கள் சொன்னவாறு, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைறெவில்லை என்று சொன்னால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 35/2019 Crime No. 56/2019 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-12/LW13- சந்திரபாபு | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**-

நான் பவானி காவல் நிலையத்தில் பணியாற்றி, நீதிமன்ற சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். பவானி காவல் நிலைய குற்ற எண்.56/2019, (CC.No.35/2019) என்ற வழக்கின் 1ம் எதிரி மோகன், அம்மாபேட்டை காவல் நிலைய குற்ற எண்.265/2024 என்ற வழக்கில் கோபி மாவட்ட மத்திய சிறையில் உள்ளார். ஆகையால் அவரை இவ்வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த PT Warrant வழங்க உத்தரவிடுமாறு இந்த நீதிமன்றத்தில் தாழ்மையுடன் பிரார்த்தித்துக்கொள்கிறேன். இந்த சாட்சி மூலமாக நீதிமன்றத்திற்கு கொடுக்கப்பட்ட பவானி காவல் ஆய்வாளர் வழங்கிய **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 69/2023 Crime No. 466/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2/LW2- இந்திராணி | Village | |
| Husband's Name | பழனியப்பன் | Taluk | |
| Age | 55 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரிகள்ஆஜர்.**

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச.311 ன் கீழ் இந்த சாட்சியை மறு அழைப்பு செய்ய மனு செய்யப்பட்டு, அது அனுமதித்ததின் பெயரில் குறுக்கு விசாரணை-**

அ.சா.1 எனது சின்னம்மா உறவு முறை ஆகும். எனது வீட்டிற்கும், அ.சா.1 ன் வீட்டிற்கும் சுமார் 1 கிமீ குறைவாகத்தான் இருக்கும். போலீசார் மருத்துவமனையில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் சம்பவத்தை முதலில் நேரில் பார்க்கவில்லை. சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது 3ம் எதிரி தமிழ்செல்வி, கமலாவை சூரிக்கத்தியால் கையில் குத்தினார். நீங்கள் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 69/2023 Crime No. 466/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW1- கமலா | Village | |
| Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரிகள்ஆஜர்.**

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச.311 ன் கீழ் இந்த சாட்சியை மறு அழைப்பு செய்ய மனு செய்யப்பட்டு, அது அனுமதித்ததின் பெயரில் குறுக்கு விசாரணை-**

எனது மாமனாரும், 1ம் எதிரியும் அண்ணன் தம்பிகள். அவர்களுக்குள் இன்னும் பாகப்பிரிவினை ஏற்படவில்லை. நான் கூறுகிறேன் ஆஜர் எதிரிகள் அவர்களுக்குண்டான பாகத்தை உங்களிடம் கேட்டபோது நீங்கள் அவர்களை அடித்துவிட்டு அவர்கள் வழக்கு உங்கள் மீது வழக்கு போட்டுவிடுவார்கள் என்ற பயத்தில் நீங்கள் அவர்கள் மீது பொய் வழக்கு போட்டுள்ளீர்கள் என்று சொன்னால், சரியல்ல. நீங்கள் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 95/2023 Crime No. 58/2023 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3/LW6- பாஸ்கர் ராஜ் | Village | |
| Father Name | தேவன் | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் நகலூரில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 1ஆண்டுக்கு முன்பு விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் வந்து பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் இட்டேன்.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 36/2024 Crime No. 529/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3/LW3- பரத் | Village | |
| Father Name | தியாகு | Taluk | |
| Age | 24 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் பவானியில் குடியிருந்து கொண்டு ஆம்புலன்ஸ் டிரைவராக உள்ளேன். திப்பிசெட்டிபாளையம், லோட்டஸ் கார்டன் அருகில், ஏ.கே.ஆர் இன்ஜினியரிங் ஒர்க்ஷாப் அருகில் எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபொழுது விபத்து ஏற்பட்டிருந்தது. நான் விபத்தை சத்தம் கேட்டுத்தான் திரும்பி பார்த்தேன். நேரடியாக விபத்தை பார்க்கவில்லை. சத்தம் கேட்டது நான் பார்த்தேன். ஒரு பாட்டியின் மீது பைக் மோதி அவர் கீழே விழுந்து கிடந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நீங்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சங்கதிகளை போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 36/2024 Crime No. 529/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2/LW2- மோகன் | Village | |
| Father Name | அப்புசாமி | Taluk | |
| Age | 49 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் பவானியில் குடியிருந்து கொண்டு திப்பிசெட்டிபாளையம், லோட்டடஸ் கார்டன் அருகில், ஏ.கே.ஆர் இன்ஜினியரிங் ஒர்க்ஷ் என்ற பெயரில் வெல்டிங் கம்பெனி வைத்துள்ளேன்., நான் விபத்தை சத்தம் கேட்டுத்தான் திரும்பி பார்த்தேன். நேரடியாக விபத்தை பார்க்கவில்லை. எனது ஒர்க்ஷாப்பை சாத்திக் கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது நான் பார்த்தேன். ஒரு பாட்டியின் மீது பைக் மோதி அவர் கீழே விழுந்து கிடந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நீங்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சங்கதிகளை போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 36/2024 Crime No. 529/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW1- தங்கராஜ் | Village | |
| Father Name | குருசாமி | Taluk | |
| Age | 45 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் சோமசுந்தரபுரத்தில் குடியிருந்து கொண்டு, ஆம்புலன்ஸ் வண்டி வைத்து ஓட்டி வருகிறேன். கடந்த 19.11.2023 ம் தேதியன்று, இரவு நான் வீட்டில் இருந்தபோது பவானி-ஆப்பக்கூடல் ரோட்டில் திப்பிசெட்டிபாளையம், லோட்டஸ் கார்டன், ஏ.கே.ஆர் இன்ஜினியரிங் ஒர்க்ஷாப் அருகில் மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு பெண் விபத்தில் அடிப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்து அங்கு சென்று அந்தப் பெண்ணை விசாரிக்க அவர் திருச்செங்கோடு, பூசாரியூரைச் சேர்ந்த ராமசாமி மனைவி பவளாயி என்று தெரிய வந்தது. முதல் உதவி சிகிச்சைக்காக பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்தும் சென்றும் பின்னர் மேல் சிகிச்சைக்காக எனது ஆம்புலன்சில் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அனுமதித்துவிட்டு வந்துவிட்டேன். பின்னர் அவர் 14.12.2023 ம் தேதியன்று இறந்துவிட்டதாக 15.12.2023 ம் தேதியன்று எனக்குதகவல் கிடைத்து 16.12.2023 ம் தேதியன்று பவானி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்ததார்.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 199/2022 Crime No. 288/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4/LW4- மைக்கேல் ராஜ் | Village | |
| Father Name | அப்புசாமி | Taluk | |
| Age | 30 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கூலிக்காரன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, மீன் பிடிக்கும் வேலை செய்து வருகிறேன். நான் விபத்தை சத்தம் கேட்டுத்தான் திரும்பி பார்த்தேன். நேரடியாக விபத்தை பார்க்கவில்லை. நான் பார்த்தபோது பைக்கும், காரும் நேருக்கு நேர் மோதி அதில் வந்தவர்கள் கீழே விழுந்து கிடந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நீங்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சங்கதிகளை போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 59/2023 Crime No. 221/2022 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2/LW7- சரவணகுமார் | Village | |
| Father Name | சுப்பிரமணி | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் செம்புளிச்சான்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் வந்து பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் இட்டேன்.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 202/2022 Crime No. 89/2022 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3/LW3- ஜோதிமுருகன் | Village | |
| Father Name | ஆறுமுகம் | Taluk | |
| Age | 51 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் மூங்கில்பட்டியில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். நான் விபத்தை சத்தம் கேட்டுத்தான் திரும்பி பார்த்தேன். நேரடியாக விபத்தை பார்க்கவில்லை. நான் பார்த்தபோது இரண்டு பைக்குகள் நேருக்கு நேர் மோதி அதில் வந்தவர்கள் கீழே விழுந்து கிடந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நீங்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சங்கதிகளை போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 202/2022 Crime No. 89/2022 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2/LW2- பிரகாசன் | Village | |
| Father Name | அருணாச்சலம் | Taluk | |
| Age | 57 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் மூங்கில்பட்டியில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். நான் விபத்தை சத்தம் கேட்டுத்தான் திரும்பி பார்த்தேன். நேரடியாக விபத்தை பார்க்கவில்லை. நான் பார்த்தபோது இரண்டு பைக்குகள் நேருக்கு நேர் மோதி அதில் வந்தவர்கள் கீழே விழுந்து கிடந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நீங்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சங்கதிகளை போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No. 172/2020 Crime No. 231/2019 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-5/LW7- ஏசுராஜ் | Village | |
| Father Name | சின்னப்பன் | Taluk | |
| Age | 62 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி பணி ஓய்வு பெற்று அந்தியூரில் குடியிருந்து வருகிறேன். நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 28.10.2019 ம் தேதியன்று, 12.00 மணிக்கு த.கா திரு.செந்தில்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், மாத்தூர் அஞ்சல் என்ற முகவரியை சேர்ந்த முருகன் மகன் மாதேஸ்வரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.231/2019, ச/பி இதச 294(b), 352, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை பெற்ற நான் அன்றைய தினமே சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான சுகுமார் மற்றும் கணபதி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் மாதேஸ்வரன், சூரியா, விக்னேஷ், கணபதி மற்றும் சுகுமார் ஆகியோர்களை விசாரித்து தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர் 29.10.2019 ம் தேதியன்று, குருவரெட்டியூர் பஸ் ஸ்டாப் எதிரில் நின்றிருந்த எதிரி கீர்த்தியை மதியம் 12.00 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி முறைப்படி கைது செய்தும், நிலையம் அழைத்து வந்த திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த த.கா வை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து 10.02.2020 ம் தேதியன்று எதிரி மீது இதச 294(b), 352, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கை 1 ஒருநாள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டது என்பதற்குண்டான விளக்கத்தை இறுதியறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். நான் சொன்னவாறு, சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைறெவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை

என்று சொன்னாலும், வேறு சம்பவத்தில் ஏற்பட்ட காயங்களை பயன்படுத்தி எதிரிகள் மீது கொடுத்த பொய் புகாரை நான் சரிவர விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது ஒரு பொய்யான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No. 686/2022 Crime No. 100/2022 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4/LW3- பரமேஸ்வரன் | Village | |
| Father Name | சண்முகம் | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை-**

நான் குருவரெட்டியூரில் குடியிருந்து கொண்டு,விவசாயம் செய்து வருகிறேன். எதிரி செல்வராஜை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். அ.சா.1 சசிகலா எனது சித்தப்பா மகள் ஆவார். எனது வீட்டிலிருந்து அ.சா.1ன் வீடு சுமார் 200 மீட்டர் தூரத்தில் உள்ளது.

தேதி மற்றும் மாதம் நினைவில்லை, சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு காலை சுமார் 07.00 மணியளவில், சசிகலாவின் கோழி எதிரியின் வீட்டிற்கு சென்றுவிட்டதால், சசிகலா கோழியை விரட்டி விடுவதற்காக எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதிரி ஏன் உன் கோழி இங்கு வருகிறது என்று கூறி சசிகலாவை கன்னத்தில் அடித்துவிட்டார். இதனை நேரில் பார்த்த நான் ஓடிச் சென்று விலக்காட்டிவிட்டேன். பின்னர் சசிகலா காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தனர்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி குடும்பத்திற்கும், எதிரி குடும்பத்திற்கும் இடையே நில சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது. நான் கூறுகிறேன் நீங்கள் சம்பவத்தை நேரில் பார்க்காமல் அ.சா.1 உங்களுக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 137/2022 Crime No. 201/2019 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-5/LW8- சிவாஜி | Village | |
| Father Name | கெங்கு ரெட்டியார் | Taluk | |
| Age | 60 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

1) நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி பணி ஓய்வு பெற்று அம்மாபேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் அம்மாபேட்டை காவ்ல நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 23.09.2019 ம் தேதியன்று, 10.00 மணிக்கு த.கா திரு.பூபதி என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது சின்னப்பள்ளத்தை சேர்ந்த குரு செடி அந்தோணி ராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.201/2019, ச/பி இதச 294(b), 323, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) பின்னர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை பெற்ற நான் அன்றைய தினம் 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான வரதராஜ் மற்றும் அர்ஜுனன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்திலிருந்து கைப்பற்றுதல் மகசர் மூலம் ஒழுங்கற்ற வடிவம் உள்ள கருங்கல் ஒன்றினை கைப்பற்றினேன். கைப்பற்றிய வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள், குருசெடி அந்தோணிராஜ், ஜெகநாதன், மாதேஸ்வரன், வரதராஜ், வேலுசாமி மற்றும் அர்ஜுனன் ஆகியோர்களை விசாரித்து தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர் 08.10.2019 ம் தேதியன்று, நெரிஞ்சிப்பேட்டை படகு துறை பேருந்து நிறுத்தம் அருகில் நின்றிருந்த எதிரி தட்சிணாமூர்த்தியை மாலை 18.30 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி முறைப்படி கைது செய்தும், நிலையம் அழைத்து வந்த திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த த.கா வை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இருந்து சாட்சி அந்தோணி ராஜை, எதிரி கையால் தாக்கி ஏற்பட்ட மொக்கை காயத்திற்கு மருத்துவ சிகிச்சை எதுவும் பெறவில்லை என்றும், இன்னைக்கு தப்பிச்சிக்கிட்ட நாளைக்கு உன்னை வைச்சுக்கிறேன் என்று மிரட்டல் மட்டுமே செய்துள்ளார் என தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச 294(b), 323, 506(ii) ஆகிய பிரிவுகளிலிருந்து இதச 294(b), 352, 506(i) ஆகிய

பிரிவுகளின் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து 03.01.2022 ம் தேதியன்று எதிரி மீது இதச 294(b), 352, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் மாதிரி வரைபடம் என்னால் தயார் செய்யப்பட்டது. மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவயிடத்தில் அருகாமையில் உள்ளவர்களை நான் சாட்சியாக சேர்க்கவில்லை.

நான் இறுதியறிக்கையில் தாக்கல் செய்தவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும், வேறு சம்பவத்தில் ஏற்பட்ட காயங்களை பயன்படுத்தி எதிரிகள் மீது கொடுத்த பொய் புகாரை நான் சரிவர விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது ஒரு பொய்யான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. நான் சொன்னவாறு, சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைறெவில்லை என்று சொன்னால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 40/2023 Crime No. 200/2022 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4/LW7- முருகன் | Village | |
| Father Name | குப்புசாமி | Taluk | |
| Age | 43 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் முகாசிபுதூரில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன்.சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் வந்து பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் இட்டேன்.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 40/2023 Crime No. 200/2022 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3/LW5- சசிகுமார் | Village | |
| Father Name | கந்தசாமி | Taluk | |
| Age | 23 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் பூனாச்சியில் குடியிருந்து கொண்டு, தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.07.2022 ம் தேதியன்று, காலை சுமார் 08.45-09.00 மணிக்குள், பூனாச்சி பஸ் ஸ்டாப் அருகிலுள்ள அங்காயம்மாள் மளிகை கடையில் நான் வேலை செய்து கொண்டிருந்தபோது இந்த விபத்தில் இறந்துபோன நபர் கடையில் பொருட்களை வாங்கிக் கொண்டு தனது XL 100 இருசக்கர வாகனத்தில் அம்மாபேட்டை ரோட்டில் தனது வண்டியில் கிளம்பும்போது மண் ரோட்டிலிருந்து மெயின் ரோட்டிற்கு வந்து சேரும்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வந்த Splendor பைக் முன்னால் சென்று கொண்டிருந்த XL 100 இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. விபத்தை நேரில் பார்த்த நான் அருகில் சென்று பார்த்தபோது அவர் பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். அங்கிருந்தவர்களின் உதவியுடன் ஒரு போக்கு வண்டி மூலமாக அடிப்பட்டவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். ஆஜர் எதிரிதான் மேற்படி விபத்தை ஏற்படுத்தியவர் என்று சாட்சி அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாணை**

இந்த விபத்தில் இறந்துபோன வெங்கடேஸ்வர மூர்த்தி மண் ரோட்டிலிருந்து மெயின் ரோட்டிற்கு எந்த சைகையும் காட்டாமல் திடிரென்று வந்துவிட்டார் என்று சொன்னால், சரிதான்.